மரணத்தில் முடியுமா புலிவீரர் வாழ்வு
ஈழம் மலர்ந்த பின்னும் உயிர் வாழும் மாவீரர் நினைவு

இசை

மாவீரர் சுமந்த கனவுகளில் ஒரு தேசம் தெரிகின்றது
மாவீரர் சுமந்த கனவுகளில் ஒரு தேசம் தெரிகின்றது
அவர் மண்ணுள் புதைந்து போனபின்னும் வீர வாழ்வு தொடர்கின்றது
வீர வாழ்வு தொடர்கின்றது
மாவீரர் சுமந்த கனவுகளில் ஒரு தேசம் தெரிகின்றது
ஒரு தேசம் தெரிகின்றது ...

இசை

விழிகளில் நெருப்புடன் புலிகள் போயினர் ..(இசை)
விழிகளில் நெருப்புடன் புலிகள் போயினர் ..
வேட்டொலி கேட்கின்றது
அங்கெ வேள்வித் தீயில் வீழ்ந்தவர் உடல்கள் தோளில் வருகின்றது
தோழர்கள் தோளில் வருகின்றது ...
மாவீரர் சுமந்த கனவுகளில் ஒரு தேசம் தெரிகின்றது
ஒரு தேசம் தெரிகின்றது ...

இசை

தமிழீழ கனவை நெஞ்சினில் சுமந்தவன் உறங்கி கிடக்கின்றான் (இசை)
தமிழீழ கனவை நெஞ்சினில் சுமந்தவன் உறங்கி கிடக்கின்றான்
அவன் மார்பினில் குண்டேந்தி மாவீரன் ஆகித்தன் தாய்வீடு வருகின்றான்
அவள் மடி மீது புதைகின்றான் ..
மாவீரர் சுமந்த கனவுகளில் ஒரு தேசம் தெரிகின்றது
ஒரு தேசம் தெரிகின்றது ...

இசை

மாவீரர் படைத்திடும் பூமியில் எங்கள் தலைமுறை வாழ்கின்றது (இசை )
மாவீரர் படைத்திடும் பூமியில் எங்கள் தலைமுறை வாழ்கின்றது
அங்கே மானிடராய் நாம் நிமிர்ந்திடும் தேசம் கண்ணுள் விரிகின்றது
எங்கள் கண்ணுள் விரிகின்றது ..
மாவீரர் சுமந்த கனவுகளில் ஒரு தேசம் தெரிகின்றது
அவர் மண்ணுள் புதைந்து போனபின்னும் வீர வாழ்வு தொடர்கின்றது
வீர வாழ்வு தொடர்கின்றது